# சிலேடை நூல்கள்

## நமச்சிவாயப் புலவர்

இயற்றிய

# சிங்கைச் சிலேடை வெண்பா

சிங்கையில் எழுந்தருளிய சிவபெருமானைப் பற்றிப் பாடிய சிலேடை வெண்பாக்களினாலாகிய நூல் இது. சிங்கை, பாண்டி நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான விக்கிரமசிங்கபுரம் ஆகும். இங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமான் பெயர் கலியாண சுந்தரர்; அம்மையார் பெயர் திருமணக்கோல நாயகி.

இந்நூலில் கூறும் சிலேடைகள் பிரிமொழிச் சிலேடை எனப்படும். பிரிமொழிச் சிலேடையாவது ஒரு வகையாக நின்ற சொல்லைப் பிரித்துத் தொகை வேறுபடுத்திப் பல பொருள்களாகக் கொள்ளுதலாம்.

### காப்பு

கங்கை வெண்பா மாலைமுடிக் கல்யாண சுந்தரனார்
சிங்கைவெண்பா மாலை சிறப்பாகத் - தங்கியதென்
கற்பகத்தின் கான்மலரக் கட்டினனார் கொண்டொருகைக்
கற்பகத்தின் கான்மலரக் கால்.

### நூல்

பூங்கழனி மங்கையரும் புண்டரிகப் பொய்கைகளும்
தேங்கமலங் களையுஞ் சிங்கையே - ஓங்கல்
வரிசிலையா னனத்தான் வானிமிர்ந்து காணும்
பரிசிலையா னனத்தான் பற்று. 1



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

எவ்வழிநின் றுள்ளோரு மேழிசைய வண்டினமும்
செவ்வழியின் பண்புணருஞ் சிங்கையே - மைவழியும்
காவிக் கழுத்தினார் கஞ்சபத நெஞ்சுறவிப்
பாவிக் கழுத்தினார் பற்று. 2

கல்விக் குரவருமென் கார்க்குரவக் கோதையரும்
செல்விக் கினமடுக்குஞ் சிங்கையே - நல்வித்
துரும வரையினார் சோதியர்சார்த் தூலச்
சரும வரையினார் சார்பு. 3

மாலைக் குழன்மடவார் வாள்விழியு மாளிகையும்
சேலைக் கொடி திகழுஞ் சிங்கையே - ஆலைக்
கரும்பனைக்கா யங்கெடுத்தார் காலாந்தத் தாடல்
விரும்பனைக்கா யங்கெடுத்தார் வீடு. 4

வெவ்வாம் பரிமகமு மெல்லியலார் மெல்லிதழும்
செவ்வாம் பலங்கொடுக்குஞ் சிங்கையே - கைவாங்
கொருகனக வில்லா னுயரிமய வேந்தன்
மருகனக வில்லான் மனை. 5

வேம்பருமட் கூனுமத வெங்களிறுந் தண்ணறவார்
தீம்பருவப் பாகிவருஞ் சிங்கையே - கூம்பநிலா
விட்டவிருந் துண்டார் விருப்பாற் புனிதவதி
இட்டவிருந் துண்டா ரிடம். 6



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

ஆயுத் தமர்நாவு மந்தணரோ மக்குழியும்
தேயுந் தரமாற்றுஞ் சிங்கையே - நோயுள்
படிந்தவனா கப்பணியான் பாவியேன்பா லின்னல்
கடிந்தவனா கப்பணியான் காப்பு. 7

மல்லியைந்த தோளினரும் வானசுணப் புள்ளினமும்
சில்லியந்தே ரச்சடைக்குஞ் சிங்கையே - சொல்லினிரு
கான மயிலார் கறிசமைத்த பிள்ளைவரப்
போன மயிலார் புரம். 8

நித்திலத்தாற் சோறடுபொன் னீர்மையரும் பாவலரும்
சித்திரப்பா வைக்கூட்டுஞ் சிங்கையே - அத்திரத்தால்
சோர விலங்கையினான் சோரவென்ற வாளிதொட்ட
பார விலங்கையினான் பற்று. 9

கொப்புக் குழையார்கொங் கைக்குடமு மட்குடமும்
செப்புக் குடம்பழிக்குஞ் சிங்கையே - துப்புப்
பழுக்கு மிதழியோர் பாகர்பசுந் தேன்வாய்
ஒழுக்கு மிதழியோ ரூர். 10

காந்த ரொடும்புணர்ந்தார் கண்களுமக் காளையரும்
சேந்த னலம்படருஞ் சிங்கையே - பூந்துளவ
வாரிசவா சத்தார் வனைந்தார் தொழுமலைய
பாரிசவா சத்தார் பதி. 11



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

கற்பநிலை வேட்டோர் கருத்தின்மனைப் பித்திகையில்
சிற்பவரைவண்ணங்குறிக்குஞ் சிங்கையே - பொற்பின்
விலங்கற் குடையார் விதிமுதலோர் சென்னி
அலங்கற் குடையா ரகம். 12

விம்முமலர்ப் பூங்கொத்தும் வித்துரும வாய்ச்சியரும்
செம்மலைமாற் றத்தழைக்குஞ் சிங்கையே - கைம்மலரில்
துள்ளுமறி வைத்திருப்பார் தொண்டுபுரியார்க் கிருள்வாய்த்
தள்ளுமறி வைத்திருப்பார் சார்பு. 13

மிக்க சிறைமயிலு மென்பயிர்க்குத் தீம்புனலும்
செக்கணியா டிக்களிக்குஞ் சிங்கையே - முக்கண்
ஒருவ ருமாபதியா ருன்னிலர்பான் ஞானத்
திருவ ருமாபதியார் சேர்வு. 14

கோட்டரும்பொன் மாமதிலுங் கோடா விளையவரும்
சேட்டருங்கன் பாற்றிவருஞ் சிங்கையே - தோட்டருக்கம்
தண்ணந் தெரியலார் சத்தியவே தாந்தமுந்தம்
வண்ணந் தெரியலார் வாழ்வு. 15

கட்டாம் பகைப்புலத்துங் காலமுணர்ந் தோர்கருத்தும்
திட்டாந் தாந்தெரியுஞ் சிங்கையே - எட்டாம்
திசைக்கலிங்கத் தார்வார் திரைப்பொருகை மான்போல்
திசைக்கலிங்கத் தார்வா ரிடம். 16



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

ஏர்வாய் மணிமறுகு மெண்ணெண் கலையினரும்
தேர்வா னினைவீட்டுஞ் சிங்கையே - ஓர்பால்
பசக்கச் சிவந்தார் பனிவரைக்குத் தென்பா
ரிசக்கச் சிவந்தா ரிடம். 17

காவ னனியறமுங் கான்பொருநைப் பேராறும்
சீவனமன் பாற்பயந்தாழ் சிங்கையே - காவல்
மறையவன்றூ தேவினார் வால்வளையை மாற்றார்
மறையவன்றூ தேவினார் வாழ்வு. 18

பற்றித் தமிழ்கேட்கும் பண்பினருந் தோரணும்
தெற்றித் தலையசைக்குஞ் சிங்கையே - நெற்றி
கிழிக்குந் திருக்கழலார் கெற்சிதக்கூற் றாற்றல்
ஒழுக்குந் திருக்கழலா ரூர். 19

இச்சைகூர் மாந்த ரிணைப்புயமும் பூந்தருவும்
செச்சையா ரத்தாழுஞ் சிங்கையே - பிச்சை
இடவென்று வந்தா ரிடுபலிகொண் டாசைப்
படவென்று வந்தார் பதி. 20

ஆசில் வயப்புரவி யார்ப்புங் கணிதரும்வான்
தேசி கனைப்பழிக்குஞ் சிங்கையே - காசிமுதல்
ஆளுந் தலத்தகத்தா ரம்புலிச்சூட் டிற்கவுரி
தாளுந் தலத்தகத்தார் சார்பு. 21



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

பம்பு பொருநையுமெய்ப் பண்புடையோர் நன்மதியும்
செம்புதனை யுட்குவிக்குஞ் சிங்கையே - அம்புயமார்
வேதசிர மத்தார் விரிசடைவைத் தார்நடிக்கும்
பாதசிர மத்தார் பதி. 22

பூங்குழலார் வார்த்தைகளும் பொய்யிகந்தோ ரைம்புலனும்
தீங்குழலா வாய்த்தேறுஞ் சிங்கையே - ஓங்குமுயர்
ஆன குமரனா ரையரெயின் மூன்றெரியத்
தான குமரனார் சார்பு. 23

மையிற் செறி குழலார் வார்முலைச்சாந் துங்குருகும்
செய்யிற் கயலாருஞ் சிங்கையே - கையில்
நெருப்புக் கணிச்சியார் நேயமில்லார் பொய்மை
விருப்புக் கணிச்சியார் வீடு. 24

வவ்வு நிதிக்ககன்ற மைந்தருந்துப் பும்மடவார்
செவ்வி தழைக்கவருஞ் சிங்கையே - எவ்வினையும்
தீரத் திருந்தகத்தர் சேவைசெயத் தண்பொருநைத்
தீரத் திருந்தகத்தர் சேர்வு. 25

கன்னித் தடம்பொழிலாற் கற்றோர்கை வந்தனையால்
சென்னித் தலம்புகுக்குஞ் சிங்கையே - தன்னைத்
திடவ சனத்தினான் சீர்வழுத்த வைத்தான்
விடவ சனத்தினான் வீடு. 26



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

ஓவா வளங்கெழுநீ ரூர்க்களம ருந்தெருவும்
தேவா லையங்காட்டுஞ் சிங்கையே - மேவார்
இருப்பரணங் காதரனா ரீர்ம்பொதியச் சாரல்
விருப்பரணங் காதரனார் வீடு. 27

மெய்யுள் வழங்குதமிழ் வேந்தருமென் பால்வளையும்
செய்யு ளவைவழங்குஞ் சிங்கையே - பையுள்
சிதையத் திருந்தார் திறத்தகன்று மேலோர்
இதையத் திருந்தா ரிடம். 28

கன்மந் தருவினையுங் கன்னியர்கொங் கைச்சுவடும்
சென்மந் தரமலைக்குஞ் சிங்கையே - வன்மம்
முரணகம லத்தினார் முன்பயிலா நிர்த்த
சரணகம லத்தினார் சார்பு. 29

பத்த சனங்களுமென் பான்மொழியார் வேல்விழியும்
சித்த சனம்பயிலுஞ் சிங்கையே - சுத்தசல
வானகங்கைக் குள்ளார் வரதா பயமழுமான்
நானகங்கைக் குள்ளார் நகர். 30

காம்பார் பசுந்தோளார் கண்ணு மணிவயிறும்
தேம்பா னலங்கடக்குஞ் சிங்கையே - பாம்பா
பரணத் தரத்தனார் பார்த்த னடித்திட்ட
விரணத் தரத்தனார் வீடு. 31



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

அண்ணற் பழம்பொருநை யாறுமறி வோர்மனையும்
திண்ணத் தறனிறைக்குஞ் சிங்கையே - எண்ணத்தின்
முன்றுருவ மானான் முகன்காண மூட்டழல்போல்
அன்றுருவ மானா னகம். 32

பாங்களவா வெண்டிசையும் பத்தியடி யார்குழுவும்
தீங்களவா சஞ்செறியுஞ் சிங்கையே - ஓங்காரத்
துள்ளொளியா நின்றா னுபநிடதத் துச்சியின்மேல்
அள்ளொளியா நின்றா னகம். 33

மைவார் பொழிற்றுயிலு மாமதியை வேதியரைச்
செவ்வா ரணமெழுப்புஞ் சிங்கையே - ஒவ்வாத
போற்றுக் கொடியான் புகழவுமென் பாலிரங்கும்
ஏற்றுக் கொடியா னிடம். 34

தூயவரை யிஞ்சியின்வாய்த் துஞ்சுமதி யைக்கண்டு
தீயவர வங்கடுக்குஞ் சிங்கையே - ஆயர்
கறவையா னானான் கனன்மழுவா னன்னப்
பறவையா னானான் பதி. 35

அன்றலைநீ ருண்டவனு மாரத் தடம்பொழிலும்
தென்றலைம ணந்துவக்குஞ் சிங்கையே - மன்றல்
உலையா வணமளித்தா ரூரனையாட் கொள்ள
விலையா வணமளித்தார் வீடு. 36



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

வந்துபகைத் தோர்பொரலால் வண்டுமதத் தால்வரலால்
சிந்துரத்த வாறடுக்குஞ் சிங்கையே - கந்தரத்தில்
சற்றுக் கறுப்பார் தழற்சிவப்பார் சஞ்சிதமென்
பற்றுக் கறுப்பார் பதி. 37

காவ லிளைஞர் கடுநடையிற் பூந்தடத்தில்
சேவ லனங்குடையுஞ் சிங்கையே - மூவர்
திருப்பாட லாரத்தர் சிற்சபையி லொற்றித்
திருப்பாட லாரத்தர் சேர்வு. 38

மைதவழ்கண் ணார்மருங்கு மாதவத்தோ ருந்தவறு
செய்தகவஞ் சிக்காக்குஞ் சிங்கையே - கைதைநறும்
போதைமுடி வைத்தணியார் போற்றறியார் புன்பிறப்பை
வாதைமுடி வைத்தணியார் வாழ்வு. 39

எவ்வா யினுமுணர்ந்தோ ரின்னறிவு மாகதரும்
செவ்வாய் வழுத்தடுக்குஞ் சிங்கையே - வெவ்வாய்
நரககட கத்தினா னண்ணிவிடா தெண்ணும்
உரககட கத்தினா னூர். 40

ஈகையற்ற வஞ்சரையு மெண்ணான் கறங்களையும்
சேகரித்து மெய்ப்புணர்த்துஞ் சிங்கையே - சாகரத்தை
உண்ட வருக்கொளியா ரோரா யிரங்கதிர்வாள்
விண்ட வருக்கொளியார் வீடு. 41



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

தூயநிலை வாய்மையருந் தொல்லைமனு நூனெறியும்
தீய வழுக்கறுக்குஞ் சிங்கையே - நேயம்
எடுத்த திகம்பரத்தா ரேத்தவருள் செய்வார்
உடுத்த திகம்பரத்தா ரூர். 42

வெய்ய மிடியும் விரிபொருநை வெண்டிரையும்
செய்ய வளங்கொழிக்குஞ் சிங்கையே - ஐயர்
துவளக் குழையார் துடியிடையார் சங்கத்
தவளக் குழையார் தலம். 43

பூவகத்திற் போர்கடந்த பூட்கையும்வில் வேட்கையரும்
சேவகத்தி லேவழங்குஞ் சிங்கையே - பாவகத்தில்
ஒக்க வருவா ரொருவரெனில் வேறுணரத்
தக்க வருவார் தலம். 44

மாவாய்மைத் தொண்டர் மணிவாயு நன்மனமும்
தேவாரப் பண்பாடுஞ் சிங்கையே - ஓவாமல்
சீலமிசைந் துள்ளார் தெரிவரியார் தெண்டிரைநீர்
ஆலமிசைந் துள்ளா ரகம். 45

நீதியுமென் புட்குலத்தோர் நீள்சிறைய புள்ளினமும்
தீதி னவந்தடுக்குஞ் சிங்கையே - பாதி
மரகதமே விட்டார் வழுதியெதிர் சம்புக்
குரகதமே விட்டார் குடி. 46



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

வேறற் கரும்பகையும் வேழம்நம் பாய்நிலமும்
சேறற் கருமையவாஞ் சிங்கையே - மாறற்கு
வெப்பழிக்கு நீற்றினார் மேவார் புரமெரியுந்
தப்பழிக்கு நீற்றினார் சார்பு. 47

பத்தி தருவிழவும் பன்மா ளிகையுமுன்னாட்
சித்திரைமா தங்குலவுஞ் சிங்கையே - புத்திரராம்
தார்க்குஞ் சரமயிலான் றதையொரு பாதிதனைப்
பார்க்குஞ் சரமயிலான் பற்று. 48

பிந்தாத நல்லறமும் பேராயர் வேய்ங்குழலும்
சிந்தா குலந்தணிக்குஞ் சிங்கையே - சந்தார்
புளகத் தனத்தனாள் பூட்டுகுறி மார்பத்
துளகத் தனத்தனா ளூர். 49

வேய்வனமும் போர்க்களத்து வீரரடு செஞ்சரமும்
தீவனமா கத்தாக்குஞ் சிங்கையே - நோவன்முன்
தந்துபர சண்டன் சமர்விளைப்ப மார்க்கண்டன்
வந்து பரசண்டன் மனை. 50

அன்னந் துணர்க்கமலத் தாடவர்கள் கோமறுகில்
சின்னந் துவைத்தார்க்குஞ் சிங்கையே - பொன்னம்
பலவிருப்ப ரானார் பழம்புவன கோடி
பலவிருப்ப ரானார் பதி. 51



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

ஐய பசுந்தமிழு மாறறிநூ லந்தணரும்
செய்ய மகம்புரியுஞ் சிங்கையே - சையம்
தருகுமா ரத்தியார் தந்தலைவர் வேணி
செருகுமா ரத்தியார் சேர்வு. 52

பந்தித்த கச்சுமின்னார் பாடகப்பூந் தாணடையும்
சிந்தித்த னந்திரியுஞ் சிங்கையே - பந்திக்
குடிலச் சடையார் கொடியனைப்பாண் பீறல்
குடிலச் சடையார் குடி. 53

மெய்ம்மாண் பினருளமு மெல்லியலார் மெய்ச்சுணங்கும்
செம்மாந் துணர்விலருஞ் சிங்கையே - பெம்மான்
கணிச்சிகரத் தாற்றினான் காமருபூந் தென்றல்
மணிச்சிகரத் தாற்றினான் வாழ்வு. 54

மைந்தரயில் வேல்வலியில் வாம்புரவித் தேரேற்றில்
செந்தி னகரனைநேர் சிங்கையே - அந்தி
திறம்பழகு மெய்யினார் சின்மயவே தாந்தத்
திறம்பழகு மெய்யினார் சேர்வு. 55

கானாறு நாண்மலரிற் கன்னற் பெரும்பணையில்
தேனாறு கால்பாயுஞ் சிங்கையே - யூனாற
உண்டவரை வில்லா ருலகேழு முண்டசரம்
கொண்டவரை வில்லார் குடி. 56



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

மூர லரும்பு முருக்கினரு மொய்ம்பினரும்
சேரலரைக் கூழையிற்சூழ் சிங்கையே - சாரல்
அலைய மலையா ரருவிகுதி பாயும்
மலைய மலையார் மனை. 57

நாற்றமலர்க் கேணிகளு நாகிளஞ்சூன் ஞெண்டினமும்
சேற்ற வளையார்க்குஞ் சிங்கையே - போற்றுகின்ற
போகவ சனத்தினார் போர்மத கரித்தோல்
வீரகவ சத்தினார் வீடு. 58

ஊறு கரிமதமு மொண்டொடியார் கண்மலரும்
சேறுவள மாற்கமிடுஞ் சிங்கையே - நீறுபுனை
வார்கரக பாலனார் வாழ்த்துமண வாளர்பலி
தேர்கரக பாலனார் சேர்வு. 59

மையார் கரும்புயலை வாழ்வாரைக் கண்டுவப்பால்
செய்யா ரளகமிகுஞ் சிங்கையே - கையால்
கடனஞ் சமைத்தான் கழற்காலான் மன்றில்
நடனஞ் சமைத்தா னகர். 60

பேரா தறநெறியிற் பெய்யுநறைப் பூங்காவில்
தேரா தவருமுறுஞ் சிங்கையே - சோராது
பூவாரப் பாட்டினார் பொன்னா டளிக்கவைத்த
தேவாரப் பாட்டினார் சேர்வு. 61



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

ஆரத் தடம்பொருநை யாறுமடற் காளையரும்
தீரத் தனம்பெயராச் சிங்கையே - வாரத்து
நீளத் தருவா னிழல்வாழ் வருளடியார்க்
காளத் தருவா னகம். 62

ஊறன் மதநீ ருவாக்களிறு மொண்சுரும்பும்
தேறல்வாய்க் கொண்டுலவுஞ் சிங்கையே - நாறல்
நவத்துவா ரத்தினா னண்ணுமுடம் பெண்ணார்
தவத்துவா ரத்தினான் சார்பு. 63

அங்கம் பசுந்தளிரன் னார்நுதலு மாடவரும்
சிங்கம் புலிபொருதென் சிங்கையே - மங்கை
சுறவுக் குழையார் துணைவிழிதந் தோடாக்
குறவுக் குழையார் குடி. 64

தப்பாத தெய்வமறைச் சைவருமின் னார்முலையும்
செப்பாக மங்களங்கூர் சிங்கையே- கப்பான
சூலங் கரந்திரித்தார் சூழ்ந்துதக்கன் வேள்விதொக்கார்
சீலங் கரந்திரித்தார் சேர்வு. 65

பத்தித் துணர்ச்சோலைப் பைங்கனியு மென்சுரும்பும்
தித்தித் துவைப்பார்க்குஞ் சிங்கையே - சத்திக்கு
வாமங் கொடுக்கின்றார் வன்சமனை யோர்மகவால்
தாமங் கொடுக்கின்றார் சார்பு. 66



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

காரளக மாதருமென் கான மயினடமும்
சீரளவி னாடகநேர் சிங்கையே - நீரளவு
கோடீரத் தாரார் குரைகழற்கால் வஞ்சர்கொடும்
கோடீரத் தாரார் குடி. 67

ஆக்கமுறு விண்ணவரு மஞ்சிறைசெஞ் சூட்டனமும்
தேக்கமல மென்றிருக்குஞ் சிங்கையே - நோக்கம்
மதியா தவனழலான் வாழ்த்தினரைத் தாழ்த்த
மதியா தவனழலான் வாழ்வு. 68

பாரக் குழலார் பயோதரமும் பைங்கூழும்
சேரப் பணைத்துவளர் சிங்கையே - வாரத்து
நச்சரவ மானார் நரகே சரிநடுங்க
அச்சரவ மானா ரகம். 69

நேசத் தினின்மடமை நீக்கலினல் லோரெவர்க்கும்
தேசத் தினைநிகர்க்குஞ் சிங்கையே - நீசப்
புலைச்சமைய மாற்றினார் பொய்யறிவுக் கெட்டா
துலைச்சமைய மாற்றினா ரூர். 70

வெவ்வலரிக் கெத்துறையு மென்சூ லியர்நாவும்
செவ்வலரிப் பூமணக்குஞ் சிங்கையே - மௌவலரும்
பாக முறுவலா ராம்பலித ழாளைவிட்டு
யோக முறுவலா ரூர். 71



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

ஆகுலவா ரங்குறித்த வாயர் குலவணிகர்
சேகுலவா ரம்பிரிக்குஞ் சிங்கையே - கோகுலமுன்
நைவசனத் தோகையினார் ஞானவடி வின்புடையார்
சைவசனத் தோகையினார் சார்பு. 72

பன்ன வருந்தமிழ்கேட் பாருமவர் மாளைகையும்
தென்ன மலையனிகர் சிங்கையே - இன்னலெறி
வானடிக்கு நாடகத்தார் வாழவருள் வார்சுடலைக்
கானடிக்கு நாடகத்தார் காப்பு. 73

சொல்வந்த நல்லோர் தொகுமனையுஞ் சாலிகளும்
செல்வந் தமருறவாஞ் சிங்கையே - இல்வந்து
சேயத் தலைக்கறியார் தீப்பசியார் தீயவெனை
மாயத் தலைக்கறியார் வாழ்வு. 74

மானந் தரும்பொருநர் வாளிடத்தும் பூந்தடத்தும்
சேனந் துவண்டுலவுஞ் சிங்கையே - ஞானம்
தழைத்தவரைக் காப்பா ரழல்விழிக்கும் பாம்பால்
இழைத்தவரைக் காப்பா ரிடம். 75

சொன்முனிவ னின்னிசையுந் தோகையர்மென் சொல்லிசையும்
தென்மலைய வெற்புருக்குஞ் சிங்கையே - பொன்மலைவில்
கொண்டு புரங்கடந்தார் கோரவிடம் வாய்நிறைய
மண்டு புரங்கடந்தார் வாழ்வு. 76



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

பூணம் புயத்திளைஞர் பொற்படமும் வாம்பரியும்
சேணந் தரத்திரியுஞ் சிங்கையே - தூணம்
கொடுக்குநர கேசரியார் கோளொழித்தா ரென்னைக்
கடுக்குநர கேசரியார் காப்பு. 77

மீனுகளும் பூந்தடத்து மேதிகளு மென்புறவும்
தேனுவள மேய்ந்துறையுஞ் சிங்கையே - பானு
இனப்பற்று வைத்தா ரிமையமகண் மேலே
மனப்பற்று வைத்தார் மனை. 78

ஊக்கத் தமர்க்களம்புக் கோர்விழியு மாமடமும்
தீக்கைக் கனல்வழங்குஞ் சிங்கையே - யாக்கையெனும்
தோற்பொதியச் சாரலார் தொண்டரெனக் காக்குமிளம்
காற்பொதியச் சாரலார் காப்பு. 79

மேக்களவிட் டோங்குதமிழ் வெற்புமர விந்தமுஞ்சேர்
தேக்கமரப் பூம்பணைபாய் சிங்கையே - நீக்கமிலா
தெங்கு நிலாவிடுவோ ரீரச் சடாடவிமேல்
பங்கு நிலாவிடுவார் பற்று. 80

கொற்றத் தகருங் குடிப்பிறந்த கொள்கையரும்
செற்றத் தமர்வளர்க்குஞ் சிங்கையே - முற்றப்
பொறைக்கமடத் தோட்டார் புலன்போயென் னெஞ்சை
மறைக்கமடத் தோட்டார் மனை. 81



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

எவ்வெந்தப் பூம்பொழிலு மீர்ங்குமுத நாண்மலரும்
செவ்வந்திப் போதலருஞ் சிங்கையே - அவ்வந்தி
பிட்டுக் கலந்தார் பெருநீர்ப் பழம்புவனத்
தட்டுக் கலந்தார் தலம். 82

நீரகத்தே யுற்றாளு நீள்வணிகர் பொற்றோளும்
சீரகத் தார்மணக்குஞ் சிங்கையே - தாரகத்தை
அந்தத் தெனக்குனித்தா னன்பினுப தேசிப்பான்
தந்தத் தெனக்குனித்தான் சார்பு. 83

ஈவதற்கன் பாம்வணிக ரில்லுமறி வோர்மனையும்
தீவகத்தின் சாந்தமுறுஞ் சிங்கையே - நோவறுத்தென்
பாடற் களிப்பான் பணித்ததிருத் தாள்வழுத்தும்
ஆடற் களிப்பா னகம். 84

விந்தைக் கிணையாம் விறலியரு மெய்யறிவும்
சிந்தைச் சுகம்பயிற்றுஞ் சிங்கையே - முந்தைக்
கடவுண் மறைத்தலையார் காதலித்துத் தம்பால்
கடவுண் மறைத்தலையார் காப்பு. 85

ஆராயு முத்தமிழு மத்தமிழ்மந் தாநிலமும்
சீரா யசைநடைகூர் சிங்கையே - போரானை
வேகத் தசைத்தோன் மிடையு மிருளெறிப்ப
ஆகத் தசைத்தோ னகம். 86



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

நாவிக் குழன்முடிக்கு நாரியரும் பல்லுயிரும்
சீவித் தளவளவுஞ் சிங்கையே - நாவிக்
களத்து விடக்கறுப்பார் காமியத்துப் போமென்
உளத்து விடக்கறுப்பா ரூர். 87

வன்னவிலைப் பாவையர்கை வாளுகிரு மாங்குயிலும்
சின்னவடு கோதியிடுஞ் சிங்கையே - மின்னலிரும்
வேணிபினா கத்தான் விதிதலைமா லைச்சூல
பாணிபினா கத்தான் பதி. 88

முந்துதவச் செய்கையரு மொய்குழலார் கைவிரலும்
செந்துவரைத் தண்ணளிகூர் சிங்கையே - இந்து
முடிக்குந் தரித்தார் முனைவிசையன் போர்வில்
அடிக்குத் தரித்தா ரகம். 89

ஆறா ரொலியுமின்னா ரல்குலந்தேர்த் தட்டுமியற்
சீறா ரரவமொக்குஞ் சிங்கையே - யேறார்வார்
முன்னகர மானார் முகைநெகிழு முண்டகப்போ
தன்னகர மானா ரகம். 90

போதார் மலர்ப்பொழிலும் புத்தேளி ராலையமுஞ்
சீதாரி வாசமுறுஞ் சிங்கையே - சாதாரி
விண்டவிசைப் பாணனார் வெங்கரசங் காரகோ
தண்டவிசைப் பாணனார் சார்பு. 91



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

நாகரிக ரும்பொருநை நன்னதிநீர் வீசுமுத்துஞ்
சீகரமா மாலையொக்குஞ் சிங்கையே - ஏக
ரனேக விதமுடையா ரன்புசெய்வார் தங்கள்
சினேக விதமுடையார் சேர்வு. 92

பொன்னியலார் நெற்றியுந்தென் புள்ளு மிசைதெரிவான்
சென்னியரைத் தண்மதிசேர் சிங்கையே - உன்னிமனத்
தின்பாவ மாற்றினா னெய்துகதி யெய்தவணி
கன்பாவ மாற்றினான் காப்பு. 93

அக்கங் கறுத்தவர்கற் றைக்குழலிற் புத்தியிற்சேர்
சிக்கங் கறுத்துவிடுஞ் சிங்கையே - மைக்கனம்போய்ச்
சாயுச்சி யந்தருவார் தண்பொருந்தத் தாரெனக்குச்
சாயுச்சி யந்தருவார் சார்பு. 94

பார்த்திக்கி லுள்ள பலதலமு முக்களவும்
சீர்த்திக் களவுபடுஞ் சிங்கையே - மூர்த்திக்கு
மானமொழிந் தார்க்கு வடநிழற்கீழ் வந்திருந்து
ஞானமொழிந் தார்க்கு நகர். 95

பேர்த்தண் டமிழ்வரையும் பேரறமுஞ் சேர்ந்துகலி
தீர்த்தங் கொடுக்குமியற் சிங்கையே - ஊர்த்தம்
முயலு நடத்தினார் மூதண்டத் தெல்லாச்
செயலு நடத்தினார் சேர்வு. 96



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com

காப்புவளைக் கையாருங் காலவளைக் குண்மடையும்
சீப்பினள கஞ்செறிக்குஞ் சிங்கையே - கோப்புமுறைக்
குஞ்சிதத் தாளார் கொடும்பா தகர்குடியை
வஞ்சிதத் தாளார் மனை. 97

காப்பாயர் தோளிணையுங் காந்தளில்வீழ் வண்டினமும்
சேப்பாய் மருப்பொசிக்குஞ் சிங்கையே - காப்பாய
சற்பப் படலையார் தம்படிவ மாம்பவள
வெற்பப் படலையார் வீடு. 98

பாண்டிக் குலவலியிற் பல்கடவு ளாலையத்தில்
சேண்டிக் குரனவிலுஞ் சிங்கையே - வேண்டியெனை
ஆழி மலையவெற்பா ராக்கையடா தாண்டுகொண்ட
வாழி மலையவெற்பார் வாழ்வு. 99

(இந்நூலில் ஒரு செய்யுள் கிடைக்கப் பெறவில்லை)

சிங்கைச் சிலேடை வெண்பா முற்றிற்று

*****



**Our Websites**
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.in, www.dharanish.in, www.dharanishmart.com